**டிசம்பர் – 18**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த கழிவு மேலாண்மை நகர மற்றும் கற்றல் மையம் ஆனது, உத்தரப் பிரதேச மாநிலத்தின் கோரக்பூரில் உள்ள சுத்னி கிராமத்தில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட உள்ளது.
- சமீபத்தில் 16வது பங்குதாரர்கள் மாநாட்டில் (COP16), நிலங்களின் வளங்காப்பு மற்றும் நிலையான வள மேலாண்மை ஆகியவற்றில் பழங்குடியின மக்களின் விலை மதிப்பு அற்றப் பங்களிப்பினை கவனத்தில் கொள்வதற்காக முதல் முறையாக பழங்குடியின மக்கள் மன்றம் நடைபெற்றது.
- இந்தியக் கடற்படையானது மூத்தக் கடற்படை வீரர்கள், வீர் நாரிஸ் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக மகாராஷ்டிராவில் 4வது ‘SAMPARK’ என்ற பயிற்சியினைத் தொடங்கியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற உள்ள ஈகிள்னெஸ்ட் என்ற பறவை திருவிழாவின் புதிய முத்திரைச் சின்னத்தினை அருணாச்சலப் பிரதேச முதல்வர் வெளியிட்டுள்ளார்.
- மத்திய அரசானது, பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷதி பாரியோஜனாவின் கீழ் பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷதி கேந்திராக்களை (PMBJK) நடத்துவதற்கு முதன்மை வேளாண்மைக் கடன் சங்கங்களுக்கு (PACS) அதிகாரம் அளித்துள்ளது.
- புது டெல்லியில் நடைபெற்ற நான்காவது தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாட்டிற்கு பிரதமர் அவர்கள் தலைமை தாங்கினார்.
- கீதா ஜெயந்தி எனும் நிகழ்வில் சுமார் 5,000க்கும் மேற்பட்ட ஆச்சாரியர்கள் இணைந்து 'ஸ்லோகங்கள்' வாசித்ததன் மூலம் போபால் (மத்தியப் பிரதேசம்) புதிய கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளது.
- புகழ்பெற்ற புரவலரும், எழுத்தாளருமான டாக்டர் தினேஷ் ஷஹ்ரா, 'Dalai Lama’s Secret to Happiness' என்ற தனது புத்தகத்தினை வெளியிட்டுள்ளார்.
- "The Kumbaya Story" எனப்படும் இந்தியத் திரைப்படமானது மிகச் சிறப்பு மிக்க பிரிட்டிஷ் திரைப்பட மற்றும் தொலைக்காட்சிக் கலைகள் கழகத்தில் (BAFTA) நடைபெற்ற 13வது உலக நிலைத்தன்மை திரைப்பட விருது விழாவில் (GSFA) விருதினை வென்றுள்ளது.
- இந்தியாவிற்கும் சுவிட்சர்லாந்திற்கும் இடையேயான இரட்டை வரி விதிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் (DTAA) மிகவும் ஒரு சாதகமான நிலையில் உள்ள நாடு என்ற தனது அந்தஸ்தினை (MFN) சுவிஸ் அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளது.
- சமீபத்தில் இரண்டாவது இந்தியா-ஈரான்-ஆர்மேனியா முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் புது டெல்லியில் நடைபெற்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## பேச்சு சுதந்திரம் குறித்து உயர்நீதிமன்றம்

- நற்பாங்குகளின் வரம்பினை மீறுவதற்காக என்று பேச்சு/கருத்துச் சுதந்திரத்திற்கான ஒரு உரிமையை யாரும் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு பாரதிய நியாய சன்ஹிதா (BNS) சட்டத்தின் 296(b) (ஆபாசமானச் சொற்களை உச்சரித்தல்), 352 (அமைதியைச் சீர்குலைக்கும் நோக்கத்துடனான ஒரு

அவமதிப்பு) மற்றும் 353 (பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்கத்துடன் கூற்றுக்களை கூறுதல்) ஆகிய பிரிவுகள் இந்த சிக்கல் குறித்த விதிகளைக் கொண்டு உள்ளன.

- கருத்துச் சுதந்திரம் என்பது யாருக்கும் "துஷ்பிரயோகம் செய்வதற்கான உரிமத்தை" வழங்கவில்லை என்று கொல்கத்தா உயர் நீதிமன்றமும் சமீபத்தில் கூறியுள்ளது.




## அதிக ஊக்கமளிப்பு அவசியமான துறைகளுக்கான திட்டம்

- தமிழ்நாடு மாநில அரசானது, புவியின் நிலையான பயன்பாடு சார்ந்த பொருட்களின் உற்பத்தி நிறுவனங்கள், அதிக ஊக்கமளிப்பு அவசியமான துறைகள் திட்டத்தின் கீழ் பலன்களை பெறும் வகையில் அந்தத் திட்டத்தின் நோக்க எல்லையினை விரிவுபடுத்தி உள்ளது.
- இந்தத் திட்டம் மூலம், மிகவும் தகுதியான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு (MSME) சுமார் 25% அல்லது அதிகபட்சமாக 1.5 கோடி ரூபாய் மூலதன மானியம் வழங்கப்படும்.
- இந்த அலகுகள் உத்யன் தளத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் என்பதோடு மேலும், அதிக ஊக்கமளிப்பு அவசியமான துறையில் சேர்க்கப்படுவதற்கான வகையில் நன்கு அடையாளம் காணப்பட்ட சுமார் 26 தயாரிப்புகளில் ஏதேனும் ஒரு பொருளினைத் தயாரிக்கும் நிறுவனமாக அது இருக்க வேண்டும்.




# தேசியச் செய்திகள்

## பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா, 2024

- தற்போதுள்ள 2005 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் சட்டம் என்ற சட்டத்தினைத்

திருத்தியமைப்பதற்காக 2024 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை (திருத்தம்) என்ற மசோதாவினை மக்களவை நிறைவேற்றியுள்ளது.

- இதன் முக்கிய முன்மொழிவுகள்
  - தேசிய மற்றும் மாநில அளவில் பேரிடர் தரவுத் தளங்களை உருவாக்குதல்
  - மாநில தலைநகர் மற்றும் மாநகராட்சிக் கழகங்கள் கொண்ட மிகவும் பெரிய நகரங்களுக்கான நகர்ப்புற பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கட்டமைப்பு, மற்றும்
  - மாநில அரசுகளில் மாநிலப் பேரிடர் மீட்புப் படையினை உருவாக்குதல்.
- இந்த மசோதா தேசிய நெருக்கடி மேலாண்மைக் குழு (NCMC) மற்றும் உயர்மட்டக் குழு (HLC) போன்ற தற்போதைய அமைப்புகளுக்கு ஒரு சட்டப்பூர்வ அந்தஸ்தினை வழங்கச் செய்கிறது.

**Disaster Management (Amendment Bill), 2024:**

- The bill seeks to amend the Disaster Management Act, 2005, which was enacted to provide for the effective management of disasters.
- The bill makes provision for the constitution of "Urban Disaster Management Authority" for State capitals and large cities having municipal corporations, except the union territories of Delhi and Chandigarh.
- The bill empowers the National Disaster Management Authority (NDMA) and the State Disaster Management Authorities to prepare the disaster plan at the national level and state level, respectively, instead of the plans made by the National Executive Committee and the State Executive Committees earlier.

## தேசியக் கலாச்சார வரைபடமாக்கல் திட்டம் 2024





- கலாச்சார அமைச்சகம் ஆனது, தேசியக் கலாச்சார வரைபடமாக்கல் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவின் கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் கிராமப்புறப் பொருளாதாரங்களை மீளுருவாக்கம் செய்து அதைப் புத்துயிர் பெறச் செய்வதற்கான அதன் ஒரு ஆக்கப்

பூர்வமான திறன் ஆகியவற்றினை அடையாளம் கண்டு ஆவணப்படுத்துவதனை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இது 6.5 லட்சம் கிராமங்களின் கலாச்சார அம்சங்களை வரைபடமாக்கி (பதிவு செய்து), கலைஞர்கள் மற்றும் கலை நடைமுறைகளின் தேசிய பதிவேட்டை உருவாக்குகிறது.
- இதன் மாவட்ட வாரியான விவரங்கள் ஆனது, மேரா காவ்ன் மேரி தரோஹர் (MGMD) இணையதளத்தில் கிடைக்கப் பெறும்.
- தற்போது சுமார் 4.5 லட்சம் கிராமங்களின் தரவுகள் ஆனது MGMD இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

## சர்வதேச மற்றும் உள்நாட்டு SMS குறித்த வரையறைகள்





- இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) ஆனது, சர்வதேசத் தகவல் தொடர்பின் வரையறை குறித்த பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது.
- "சர்வதேசத் தகவல் தொடர்பு" என்பது ஒரு நாட்டில் தோன்றி மற்றொரு நாட்டில் (இந்தியா உட்பட) பெறப் படும் தகவலைக் குறிக்கிறது.
- 'சர்வதேச SMS குறுஞ்செய்தி' என்பது SMS வசதி மூலம் வழங்கப்படும் சர்வதேச தகவல் அனுப்பும் முறையைக் குறிக்கிறது.
- ஒரு நபருக்கு ஒரு செயலியிலிருந்து அனுப்பப்படும் எந்தவொரு (A2P) SMS செய்தியும் சர்வதேச குறுந்தகவலாகக் கருதப்படும்.
- ஆனால் அதனை இந்தியாவிற்கு வெளியே அமைந்துள்ள எந்தவொரு மின்னணுச் சாதனம், கணினி அமைப்பு அல்லது கணினிப் பயன்பாடு ஆகியவற்றின் பயன்பாடு அல்லது தலையீடு இல்லாமல் உருவாக்கவோ, அனுப்பவோ அல்லது பெறவோ கூடாது.
- 'உள்நாட்டுத் தகவல்' என்பது இந்தியாவிற்குள் தோன்றி மற்றும் அனுப்பப்படும் ஒரு தகவலைக் குறிக்கிறது.
- உள்நாட்டு SMS என்பது ஒரு குறுஞ்செய்தி வசதி மூலம் அனுப்பப் படும் உள்நாட்டுத் தகவலைக் குறிக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## 2030 ஆம் ஆண்டில் ஆர்க்டிக் பிரதேசத்தின் முதல் பனி இல்லாத நாள்


- ஆர்க்டிக் பகுதிகளில் காணப்படும் நீரில், 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு மில்லியன் சதுர கிலோமீட்டருக்கும் குறைவான கடல் பனிப்பரவல் இருக்கும்.
- எனவே, ஆர்க்டிக் பெருங்கடலின் முதல் பனி இல்லாத நாள் ஆனது 2030 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே நிகழலாம்.

- கடந்த 40 ஆண்டுகளில், ஒவ்வொரு தசாப்தத்திலும் கடல் பனியின் அளவு சுமார் 12.6% குறைந்து வருகிறது.
- இந்த வீழ்ச்சியின் வேகமானது, குறைந்தபட்சம் கடந்த 1,500 ஆண்டுகளில் எந்தவொரு காலத்திலும் நிகழ்ந்த வீழ்ச்சிக்கு இணையானதாக இல்லை.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## எறிகணை எதிர்ப்பு அமைப்பு - டார்க் ஈகிள்




- அமெரிக்க நாடானது, டார்க் ஈகிள் என்ற ஒரு புதிய எறிகணை எதிர்ப்பு அமைப்பினை உருவாக்கியுள்ளது.
- இது எதிரி நாடுகளின் எறிகணைகளை நடுவானிலேயே இடைமறித்து தாக்கும் திறன்

கொண்டது.

- இது நடுத்தர தூர வரம்புடைய எறிகணைகளைக் கொண்டுள்ளதோடு, மணிக்கு 20,826 கிலோ மீட்டர் வேகத்தில் கணைகளை ஏவக் கூடிய வேகத் திறன் கொண்டது.
- ரஷ்யாவின் S-300V4, S-400 மற்றும் S-500 அமைப்புகளை விட இந்த அமைப்பு பல மடங்கு அதிக செயல்திறன் கொண்டது என்று அமெரிக்கா கூறுகிறது.
- இது 50 கிலோமீட்டர் உயரத்தில் வினாடிக்கு 3000-3700 மீட்டர் வேகத்தில் பயணிக்கிறது.
- ரஷ்யாவிடம் அமெரிக்காவின் டார்க் ஈகிளுடன் ஒப்பிடக் கூடிய வகையிலான 53T6M எறிகணை எதிர்ப்பு அமைப்பு உள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மலாய் குருகு - மதுரை



- தென்கிழக்கு ஆசியாவில் இருந்து வலசை வரும் மலாய் குருகு பறவையானது, முதன் முறையாக மதுரையில் தென்பட்டுள்ளது.
- மியான்மர், தாய்லாந்து மற்றும் மலேசியாவை தாயகமாகக் கொண்ட இந்தப் பறவை ஆனது, குளிர்காலத்தில் இந்தியாவிற்கு வலசை வருகிறது.
- முதன்மையாக வட தமிழகம் வழியாக பறந்து செல்கின்ற இந்தப் பறவையானது மிகப் பொதுவாக கேரளா மற்றும் கர்நாடகாவில் தென்படும்.

## IISR சுரசா - புதிய இஞ்சி வகை

- இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனமானது (IISR), அதன் புதிய இஞ்சி வகையை வணிகப் பயன்பாட்டிற்காக அறிமுகப் படுத்தியுள்ளது.
- IISR சுரசா எனப் பெயரிடப்பட்ட இந்த இரகம் ஆனது, விவசாயிகளின் பங்கேற்புடன்

கூடிய தாவர இன உருவாக்கத் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ காய்கறியாகப் பயன்படுத்துவதற்காக வேண்டி மிகவும் பிரத்தியேகமாக உருவாக்கப் பட்ட இந்தியாவின் முதல் இஞ்சி வகை இதுவாகும்.

---

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் சார்ந்த வேலைவாய்ப்புகளில் முறையான வேலைவாய்ப்பு 2024

| Region | Current employment (thousands of persons) | Additional employment by 2030 (thousands of persons) |
|---|---|---|
| North America | 233 – 706 | 190 – 318 |
| EU27 | 274 – 398 | 190 – 318 |
| Rest of Europe and Central Asia | 204 – 337 | 1,166 – 1,426 |
| Latin America and the Carribean | 571 – 612 | 1,375 – 5,799 |
| Arab States | 1 | 615 – 780 |
| Asia and the Pacific | 57,291 – 58,819 | 10,942 – 15,779 |

❖ இந்த அறிக்கையானது ரியாத் நகரில் நடைபெற்ற UNCCD அமைப்பின் COP 16 என்ற மாநாட்டில் வெளியிடப்பட்டது.

❖ இந்த அறிக்கையானது இந்தத் தொடரின் இரண்டாவது அறிக்கையாகும் என்பதோடு இதன் முதல் பதிப்பு 2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

❖ இந்த அறிக்கையின்படி, உலகின் இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் (NbS) சார்ந்த வேலைவாய்ப்புகளில் சுமார் 93-95 சதவீதம் ஆனது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் குவிந்துள்ளது.

- இந்தியாவில் உள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (MGNREGS) ஆனது இதில் முக்கியப் பங்காற்றுகிறது.
- NbS மூலம் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகள் மூலம் உலகளவில் பயனடைந்த 59 மில்லியன் மக்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் ஆவர்.
- 57 சதவீதச் செலவினம் ஆனது, அதிக வருமானம் கொண்ட நாடுகளில் ஏற்படுகிறது, அதே சமயம் ஆசிய-பசிபிக் பகுதியானது உலகளாவிய NbS செலவினத்தில் 44 சதவீதப் பங்கினை கொண்டுள்ளது.
- உலகளவில், உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.3 சதவீதம் மட்டுமே NbS மூலம் பங்களிக்கப் படுகிறது.

## தொழிலாளர் சந்தைக்கான திறன்கள்

- இந்த அறிக்கையானது 'Navigating Tomorrow: Mastering Skills in a Dynamic Global Labor Market' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தியத் தொழில்துறை வல்லுநர்களில் சுமார் 70 சதவீதத்திற்கும் அதிகமான நபர்கள் திறமையை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளைத் தீவிரமாக நாடுகின்றனர்
- திறன் மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கும் அரசாங்கங்களின் திறன் மீதான உலகளாவிய நம்பிக்கை 20 சதவீதம் என்ற அளவில் குறைவாகவே உள்ளது.
- அமெரிக்கா போன்ற நாடுகளில் 15 சதவீதம், ஐக்கியப் பேரரசில் 12 சதவீதம் என்ற மிக குறைவான நம்பகத்தன்மை அளவே பதிவாகி உள்ளன.
- இந்தியாவில் இந்தக் கணக்கெடுப்பில் பங்கெடுத்தவர்கள், தொழிலாளர்களின் பெரும் மேம்பாட்டில் தனியார் துறையின் பங்கினை வலியுறுத்தி, வணிகங்களில் 49 சதவீத நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர்.

| | GDP per capita | Population | Working age population | Employed | Participation | Unemployed | NEET |
|---|---|---|---|---|---|---|---|
| | Current US$ | Million | | | % | | |
| Australia | 63,933 | 26 | 22 | 14 | 65.5 | 3.7 | 8.9 |
| Brazil | 18,583 | 216 | 172 | 99 | 62.8 | 7.9 | 20.6 |
| China | 23,588 | 1,426 | 1,141 | 747 | 70.9 | 5.1 | 12.7 |
| India | 9,609 | 1,429 | 883 | 472 | 55.8 | 4.2 | 23.5 |
| Japan | 52,594 | 123 | 110 | 67 | 62.9 | 2.6 | 3.1 |
| Jordan | 12,115 | 11 | 8 | 2 | 38.6 | 18.2 | 31.5 |
| Nigeria | 5,936 | 224 | 93 | 73 | 81.3 | 3.8 | 13.9 |
| Norway | 80,003 | 5 | 5 | 3 | 66.1 | 3.6 | 6.2 |
| Saudi Arabia | 69,396 | 32 | 23 | 14 | 61.1 | 5.6 | 18.4 |
| South Africa | 15,533 | 60 | 45 | 19 | 58.5 | 28 | 31.8 |
| Spain | 49,384 | 48 | 42 | 21 | 57.9 | 12.2 | 9.1 |
| United Kingdom | 57,448 | 68 | 54 | 33 | 63.2 | 3.8 | 11.2 |
| United States | 81,695 | 340 | 267 | 161 | 62.6 | 3.6 | 11.2 |
| Vietnam | 13,666 | 99 | 76 | 55 | 73.1 | 1.5 | 11.3 |

## சிறந்த சுவைகள் குறித்த வரைபடம் - 2024-25 சிறந்த உணவு நகரங்கள்

- "உலகின் 100 சிறந்த உணவு வகைகள்" பட்டியலில் இந்தியா 12வது இடத்தைப் பெற்று உள்ளது.
- இதில் கூடுதலாக, நான்கு அசைவ இந்திய உணவுகள் "உலகின் 100 சிறந்த உணவுகள்" என்ற பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- ஆறு இந்திய நகரங்கள் அவற்றின் சமையல் சிறப்புக்காக என்று "உலகின் 100 சிறந்த

உணவுப் பகுதிகளில்" ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- மும்பை அதன் வடபாவ் எனும் உணவிற்காக உலகளவில் 5வது இடம் பிடித்துள்ளது.
- புது டெல்லி மற்றும் ஐதராபாத் ஆகியவை முறையே 45வது மற்றும் 50வது இடங்களைப் பெற்றுள்ளன.
- 71வது மற்றும் 75வது இடங்களைப் பெற்று கொல்கத்தா மற்றும் சென்னையும் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளன.
- பீட்சா என்ற உணவின் பிறப்பிடமாக விளங்கும் புகழ்பெற்ற இத்தாலியின் நேபிள்ஸ் நகரம் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.




## QS அமைப்பின் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை: நிலைத்தன்மை 2025

| 2025 Rank | 2024 Rank | Institution | Country |
|---|---|---|---|
| 1 | 1 | University of Toronto | Canada |
| 2 | 18 | ETH Zurich | Switzerland |
| 3 | 8 | Lund University | Sweden |
| 3 | 2 | University of California, Berkeley (UCB) | United States |
| 5 | 189 | UCL | United Kingdom |
| 5 | 4 | University of British Columbia | Canada |

- QS அமைப்பின் 2025 ஆம் ஆண்டிற்கான நிலைத் தன்மை தரவரிசையில் மொத்தம் 78 இந்தியப் பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன.

- இந்த ஆண்டு, இந்தத் தரவரிசையில் மொத்தம் 21 பல்கலைக் கழகங்கள் புதியதாக இடம் பெற்றுள்ளன.
- இந்தியாவில் இந்த ஆண்டு டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (உலக அளவில் 171வது இடம்) முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
- கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை இந்தியாவில் முறையே நான்காவது மற்றும் ஐந்தாவது இடத்தையும், உலக அளவில் முறையே 245வது மற்றும் 277வது இடத்தையும் பெற்றன.
- உலகளவில், டொராண்டோ பல்கலைக்கழகமானது இந்த ஆண்டின் தரவரிசையில் முதல் இடத்தினைப் பெற்ற பல்கலைக்கழகம் ஆகும்.
- அதைத் தொடர்ந்து சுவிட்சர்லாந்து நாட்டின் ETH சூரிச் பல்கலைக்கழகமும் சுவீடனில் உள்ள லுண்ட் என்ற பல்கலைக்கழகமும் மற்றும் பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகமும் (UCB) ஆகியவை கூட்டாக மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- ஆசியாவில், நான்கு நாடுகளைச் சேர்ந்த ஆறு பல்கலைக்கழகங்கள் இதன் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளன.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## E.V.K.S. இளங்கோவன்




- தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் முன்னாள் தலைவரும், ஈரோடு (கிழக்கு) தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான E.V.K.S. இளங்கோவன் காலமானார்.
- 1984 ஆம் ஆண்டில் சத்திய மங்கலம் தொகுதியிலும், 2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஈரோடு கிழக்குத் தொகுதியிலும் இவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 2004 ஆம் ஆண்டில், தான் பங்கெடுத்த முதல் மக்களவைத் தேர்தலில் கோபிச்செட்டிப் பாளையம் தொகுதியில் அவர் வெற்றி பெற்றார்.

- இவர் மத்தியப் பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் வணிகத்துறையின் இணை அமைச்சராகப் பணியாற்றினார்.
- அவர் 2014 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதியன்று தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## உஸ்தாத் ஜாகிர் உசேன்

- தனது தலைமுறையின் தலைசிறந்த தபேலா கலைஞர் ஜாகீர் உசேன் (மகாராஷ்டிரா) சமீபத்தில் காலமானார்.
- இவர் தனது வாழ்க்கையில் நான்கு கிராமி விருதுகளைப் பெற்றுள்ளார்.
- அவர் 1988 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ, 2002 ஆம் ஆண்டில் பத்ம பூஷன் மற்றும் 2023 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார்.





# இதரச் செய்திகள்

## மெல்யே-அமிலி – புளிக்கச் செய்யப்பட்ட மூங்கில் குருத்து

- மெல்யே-அமிலி கொண்டுள்ள உடல் பருமன் எதிர்ப்பு பண்புகள் ஆனது, எடையினைச் சீராகப் பேணுவதற்கும் வளர்சிதை மாற்ற ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்குமான இயற்கையான உணவுத் தீர்வினை வழங்குகிறது.
- இது திரிபுராவின் பாரம்பரிய புளிக்கச் செய்யப்பட்ட மூங்கில் குருத்து வகையாகும்.

- வட கிழக்கு இந்தியாவில், சில சமூகத்தினர் மூங்கில் குருத்துகளை மிக நன்கு புளிக்க வைப்பதற்காக வேண்டி சில தனித்துவமான முறைகளை உருவாக்கியுள்ளனர் என்ற நிலையில் இந்தத் தனித்துவமான முறைகள் அவற்றின் ஊட்டச்சத்து மதிப்பு மற்றும் சுவையை மேம்படுத்துகின்றன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★